وَهُوَ الْغَفُوْرُ الْوَدُوْدُ ﴿١٤﴾ ذُو الْعَرْشِ الْمَجِيْدُ ﴿١٥﴾ فَعَّالٌ لِّمَا
يُرِيْدُ ﴿١٦﴾ هَلْ اَتٰىكَ حَدِيْثُ الْجُنُوْدِ ﴿١٧﴾ فِرْعَوْنَ وَ ثَمُوْدَ ﴿١٨﴾
بَلِ الَّذِيْنَ كَفَرُوْا فِيْ تَكْذِيْبٍ ﴿١٩﴾ وَّاللّٰهُ مِنْ وَّرَآئِهِمْ مُّحِيْطٌ ﴿٢٠﴾
بَلْ هُوَ قُرْاٰنٌ مَّجِيْدٌ ﴿٢١﴾ فِيْ لَوْحٍ مَّحْفُوْظٍ ﴿٢٢﴾ ع ١ ٢٢ ١٠

سُوْرَةُ الطَّارِقِ مَكِّيَّةٌ وَّهِيَ سَبْعَ عَشْرَةَ اٰيَةً

بِسْمِ اللّٰهِ الرَّحْمٰنِ الرَّحِيْمِ

وَالسَّمَآءِ وَالطَّارِقِ ﴿١﴾ وَمَآ اَدْرٰىكَ مَا الطَّارِقُ ﴿٢﴾
النَّجْمُ الثَّاقِبُ ﴿٣﴾ اِنْ كُلُّ نَفْسٍ لَّمَّا عَلَيْهَا حَافِظٌ ﴿٤﴾
فَلْيَنْظُرِ الْاِنْسَانُ مِمَّ خُلِقَ ﴿٥﴾ خُلِقَ مِنْ مَّآءٍ دَافِقٍ ﴿٦﴾
يَّخْرُجُ مِنْ بَيْنِ الصُّلْبِ وَالتَّرَآئِبِ ﴿٧﴾ اِنَّهٗ عَلٰى رَجْعِهٖ
لَقَادِرٌ ﴿٨﴾ يَوْمَ تُبْلَى السَّرَآئِرُ ﴿٩﴾ فَمَا لَهٗ مِنْ قُوَّةٍ وَّلَا
نَاصِرٍ ﴿١٠﴾ وَالسَّمَآءِ ذَاتِ الرَّجْعِ ﴿١١﴾ وَالْاَرْضِ ذَاتِ
الصَّدْعِ ﴿١٢﴾ اِنَّهٗ لَقَوْلٌ فَصْلٌ ﴿١٣﴾ وَّمَا هُوَ بِالْهَزْلِ ﴿١٤﴾ اِنَّهُمْ
يَكِيْدُوْنَ كَيْدًا ﴿١٥﴾ وَّاَكِيْدُ كَيْدًا ﴿١٦﴾ فَمَهِّلِ الْكٰفِرِيْنَ
اَمْهِلْهُمْ رُوَيْدًا ﴿١٧﴾ ع ١ ١٧ ١١

14. இன்னும் அவனே (விசுவாசங் கொண்டோரான தன் அடியார்களை) மிக்க மன்னிப்பவன்; மிக்க நேசிப்பவன்_
15. (அவன்தான்) அர்ஷுடையவன்; பெரும் கீர்த்தியுடையவன்_
16. தான் நாடியதையெல்லாம் மிகுதியாகச் செய்யக்கூடியவன்.
17. அந்தப் படைகளின் செய்தி (நபியே!) உமக்கு வந்ததா?
18. ஃபிர் அவ்னுடையவும், ஸமூதுடையவும்;
19. எனினும், நிராகரிப்போர் (குர் ஆனைப்) பொய்யாக்குவதிலேயே (மூழ்கி) இருக்கின்றனர்.
20. (ஆனால்) அல்லாஹ்வோ, அவர்களுக்கு அப்பாலிருந்து (அவர்களை எல்லாப்பகுதிகளிலிருந்தும்) சூழ்ந்து கொண்டிருக்கின்றான்.
21. எனினும், அது கீர்த்திமிக்க குர்ஆனாகும்.
22. பாதுகாக்கப்பட்ட (லவ்ஹுல் மஹ்ஃபூள் எனும்) பலகையில் (உள்ளது).

---

அத்தியாயம் : 86

## அத்தாரிக் _ உதயதாரகை

வசனங்கள் : 17 மக்கீ ருகூஃ : 1

---

**அளவற்ற அருளாளன், நிகரற்ற அன்புடையோன்**
**அல்லாஹ்வின் பெயரால் (ஓதுகிறேன்).**

1. வானத்தின் மீதும், "தாரிக்"கின் மீதும் சத்தியமாக,
2. "தாரிக்" என்னவென்று உமக்கு அறிவித்தது எது?
3. (அது தான்) பிரகாசித்துக் கொண்டிருக்கும் நட்சத்திரம்.
4. ஒவ்வொரு ஆத்மாவுக்கும் (நம்மால் ஏற்படுத்தப்பட்ட) பாதுகாப்பாளர் ஒருவர் அதன் மீதில்லாமலில்லை.
5. ஆகவே, மனிதன், (தான்) எதிலிருந்து படைக்கப்பட்டிருக்கின்றானென்பதை அவன் (கவனித்துப்) பார்க்கவும்.
6. குதித்து வெளியாகும் (ஒரு துளி) நீரிலிருந்து அவன் படைக்கப்பட்டான்.
7. அது (ஆணின்) முதுகந் தண்டிற்கும் (பெண்ணின் மார்பகங்களுக்கு மேல்) நெஞ்செலும்புகளுக்கும் மத்தியிலிருந்து வெளிப்படுகின்றது.
8. நிச்சயமாக அவன், அவனை மீளவைப்பதின் மீது ஆற்றலுடையோன்.
9. சகல மர்மங்களும் வெளிப்பட்டுவிடும் நாளில்_
10. அவனுக்கு யாதொரு சக்தியுமிராது; (அவனுக்கு) உதவி செய்பவரும் இருக்கமாட்டார்.
11. (திரும்பத் திரும்ப) மழை பொழிதலையுடைய வானத்தின் மீது சத்தியமாக,
12. (தாவரவர்க்கங்கள் முளைக்க) வெடிப்பையுடைய பூமியின்மீதும் சத்தியமாக,
13. நிச்சயமாக இது (சத்திய அசத்தியத்தைப்) பிரித்தறிவிக்கக்கூடிய சொல்லாகும்.
14. இன்னும், இது (வீண்) பரிகாசமன்று.
15. (நபியே!) நிச்சயமாக அவர்கள் (உமக்கெதிராகச்) சூழ்ச்சி செய்கின்றார்கள்.
16. நானும் (அவர்களுக்கெதிராக அதைமுறியடிக்க) ஒரு சூழ்ச்சி செய்வேன்.
17. ஆகவே, நிராகரிப்போருக்கு நீர் அவகாசமளிப்பீராக! சொற்பமாக அவர்களுக்கு அவகாசமளிப்பீராக!